பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 19 ஞாயிற்றுக்கிழமை (04 08 1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 243

# மட்டக்களப்பு தாக்குதல்களில் 25 இராணுவ சிப்பாய்கள் பலி!

## பெருமளவு ஆயுதங்கள் மீட்பு; மூன்று வாகனங்கள் எரிப்பு!!

யாழ்ப்பாணம், ஆக. 4

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய இருவேறு தாக்குதல்களில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் 25 பேர் கொல்லப்பட்டனர். பெருமளவு ஆயுதங்களும் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் உன்னிச்சை இராணுவ முகாமில் இருந்து சுமார் 35 படையினர் வெலிக்கந்தை முகாம் நோக்கி, டிராக்டர் ஒன்றில் முன்னேறிக் கொண்டிருந்தனர்.

அப்போது உன்னிச்சை முகாமிலிருந்து ஒரு மைல் தொலைவில் வைத்து, படையினரை வழிமறித்த புலிகள் அவர்கள் மீது கடும் தாக்குதல் நடத்தினர்,

இந்தத் தாக்குதலில் ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் 19 பேர் கொல்லப்பட்டனர். ஏனையோர் அங்கிருந்து பின்வாங்கி மீண்டும் முகாம் சென்றடைந்தனர்.

இந்தப் படையினரிடமிருந்து பெருமளவு ஆயுதங்களை

(4ஆம் பக்கம் பார்க்க)

### ஆனையிறவு களம்

# முகாமுக்கு மிக அருகில் நேற்று கடும் சண்டை!

## மீட்பு அணி உள்ளே நுழைந்ததாக ஸ்ரீலங்கா அரசு இரவு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 4

ஆனையிறவு இராணுவ தடை முகாமின் பின்பக்கத்திலிருந்து சில நூறு யார் தூரத்தில் நேற்று முழு நாளும் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்றதாக யுத்தமுனைச் செய்திகள் தெரிவித்தன.

இதன் மத்தியில் முகாமை மீட்பதற்காக வெற்றிலைக்கேணியில் தரையிறங்கிய இராணுவ படை அணியின் ஒரு பகுதி நேற்று மாலையில் முகாமினுள் நுழைந்து அங்கு காயமடைந்த நிலையில் இருந்த படையினரை மீட்டு வந்ததாக ஸ்ரீலங்கா அரசு நேற்றிரவு அறிவித்தது.

ஸ்ரீலங்கா அரசின் அறிவிப்பை யுத்த முனைச் செய்திகளோ அல்லது சுயாதீன செய்தி நிறுவனங்களோ நேற்று நள்ளிரவு வரை ஊர்ஜிதப்படுத்தவில்லை.

ஆனையிறவு யுத்த களத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யுத்தம் சற்றுத் தணிந்திருந்தது தெரிந்ததே. இருதரப்பாரும் தாம் நிலை கொண்டிருந்த காவல் அரண்கள் மற்றும் நிலைகளைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

ஆனால் நேற்றுக் காலை உக்கிரமான சண்டை மூண்டது. பழைய தடை முகாமின் பின்பக்கமாக இராணுவத்தினர் முன்னேற முயன்றனர்.

சீனச்சகடை விமானம், அவ்ரோக்கள், பொம்மர்கள் சரமாரியாகக் குண்டு வீச்சு நடத்த இராணுவத்தினர் தமது முன்னேறும் முயற்சியை நேற்றுக் காலை 8 30 மணிக்கே ஆரம்பித்துவிட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

## இயந்திரத் துப்பாக்கி வேலி; புலிகள் அமைத்துள்ளனர்!

ஆனையிறவு முகாமை நோக்கி முன்னேறும் இராணுவ மீட்பு அணிக்கு எதிராக இரு பக்கங்களிலும் விடுதலைப் புலிகள் இயந்திரத் துப்பாக்கி வேலிகளை (Machine Gun Nests) அமைத்துள்ளனர்.

இதனால் மீட்பு அணியின் முன்னேற்றம் மிகத் தாமதமாகவே உள்ளது.

—கொழும்பில் இராணுவ அதிகாரிகள் இப்படித் தெரிவித்ததாக செய்தி ஏஜென்சிகள் தகவல் வெளியிட்டன.

[உ-த]

## பொலன்னறுவையிலும் 2 ராணுவ அதிகாரிகள் புலி!

பொலன்னறுவைப் பகுதியில் விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதல் ஒன்றில் இரு இராணுவ அதிகாரிகள் கொல்லப் பட்டனர். மற்றும் படையினர் ஐவர் காயமடைந்தனர் என்றும்—

பலாலியில் சினைப்பர் தாக்குதலுக்கு இலக்காகி சிப்பாய் ஒருவர் கொல்லப் பட்டார் என்றும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன .[ஓ-த]

## வளலாயில் குண்டுவீச்சு

யாழ்ப்பாணம், ஆக. 4

வளலாய்ப் பகுதியில் நேற்றும் காலை 6. 30 மணியளவில் விமானக் குண்டுவீச்சு நடத்தப்பட்டது. வயல் பகுதிகளில் [illegible] விழுந்து வெடித்தன.

(ஓ-15)

## சாவகச்சேரியில் அவ்ரோ குண்டு வீச்சு!

சாவகச்சேரி டச்சு வீதியில் நேற்றுக் காலை 6 மணியளவில் அவ்ரோ விமானம் குண்டு ஒன்றை வீசியது.

வெறுமையான காணிக்குள் குண்டு விழுந்து பெரும் சத்தத்துடன் வெடித்தது. அருகிலுள்ள செருக்கல் பிள்ளையார் கோவில் ஓடுகளும், ஒரு வீட்டின் ஓடுகளும் சேதமடைந்தன. இருவர் சிறு காயங்களுக்கு இலக்காகினர்.

நேற்று சந்தை நாள் என்றதால், அங்கு கூடியிருந்த பலரும் பெரும் பீதியுடன், பாதுகாப்பான இடங்களை நாடி ஓடினர். (ஓ-31-15)

## மீட்கப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 4

மட்டக்களப்பு — உன்னிச்சைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல்களின்போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:—

| | | |
|---|---|---|
| ★ ஏ. கே. 47 ரக துப்பாக்கிகள் | — | 02 |
| ★ அவற்றுக்குரிய ரவைக்கூடுகள் | — | 09 |
| ★ லிங்குடன் கூடிய ரவைகள் | — | 756 |
| ★ லிங்குகள் | — | 94 |
| ★ ரி 56 - 2 ரகத் துப்பாக்கிகள் | — | 09 |

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கிட்டு நீதிமன்றம் சென்றால் வெளியேற்றம் தாமதமாகும்

லண்டனில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேச பணியகத் தலைவர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமாரை (கிட்டுவை) லண்டனிலிருந்து வெளியேற்றுவதற்கு பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு உத்தேசித்திருப்பதை ஆட்சேபித்து, திரு. கிட்டு வழக்கு தாக்கல் செய்தால் —

அவரை லண்டனிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கை தாமதமடையும் என்று சுயாதீன செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

தமக்கு எதிரான — உள்துறை அமைச்சின் — முடிவை ஆட்சேபித்து திரு. கிட்டு லண்டன் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தால்—

அந்த வழக்கு விசாரணை முடியும் வரை உள்துறை அமைச்சினால் திரு கிட்டுவை நாட்டை விட்டு வெளியேற்ற முடியாத நிலை ஏற்படும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

(உ-5)

### தமிழீழ மண் மீட்புக்காக

## பிள்ளைகளைப் பெற்றோரே புலிகளிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஆக.4

தமிழீழப் பெற்றோர்கள் பலர் இப்போது தாமாகவே முன்வந்து தமது பிள்ளைகளை விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இணைத்து வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இருபெற்றோர்கள் தமது பிள்ளைகள் இருவரை தமிழீழ மண் மீட்புக்காக கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் ஒப்படைத்துள்ளனர்.

கிளிநொச்சி 154ஆம் கட்டை

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனை

நவீன எலக்ரோனிக் அக்கர்ய் ஒடியோ டெக், எக்கோ ஈகுவலைசர், C. D பிளேயர், எலக்ரோனிக் டப்பிங் டெக், நெஷனல் வீடியோ டெக், நெஷனல் [S-1] வீடியோ மிக்சர் முதலியன விற்பனைக்கு உண்டு. கிழமை நாட்களில் தொடர்பு கொள்ளவும்; விக்ரேஸ் இல. 23, மணிக் கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (17733)

விளக்செரிக்க, பயிர் பீடை பூச்சி அகற்ற, மருத்துவ பாவனைக்குச் சுத்தமான வேப்பெண்ணெய் போத்தல் ரூபா 90/- மில்க்வைற். [சி-0326]

## வைத்தியர் தேவை

அனுபவமுள்ள ஆயுர்வேத வைத்தியர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். நேரில் வரவும். நேரம் காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரை. இல. 1, நாவலர் வீதி, நாவாந்துறை [மார்க்கட் சந்தி] யாழ்ப்பாணம். (17462)

## அம்பாள் திருமண சேவை

B.Sc., B. A. Teachers மணப்பெண்களுக்கு மணமகன் தேவை. சின்னச்சாமிக் குருக்கள் சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (17467)

## நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். (4206)

## கண்காட்சி

அனித்தா பயிற்சி நிலையம் நடத்தும் மனையியல் கண்காட்சி இம்மாதம் 9 ஆம், 10 ஆம், 11 ஆம் திகதிகளில் நடைபெறும். கேக் ஐஸிங், சிற்றுண்டி தயாரிப்பு, சிகையலங்காரம், கைவினை, தையல்வேலை, பூநாரிமரத்தடி, கொக்குவில். (17727)

## வியாழ மாற்றம்

வியாழ மாற்றமும், ஸ்ரீ ரமண பகவான், ஸ்ரீசத்ய சாயிபாபாவின் ஒரே விதமான ஜாதகங்களும் விலை 6-50/-. எங்கும் விற்பனையாகின்றன. ரகுநாதன் பதிப்பகம், 3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ஜாதகங்களின் கணிப்புகள் PROF: சத்தியதாஸன், சித்தன்கேணி. [சி/0276]

# சமாதான மாநாட்டில் இஸ்ரவேல்

ஜெரூசலம், ஆக. 4

எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் நடைபெறவிருக்கும் மத்திய கிழக்கு சமாதான மாநாட்டில் கலந்து கொள்ளப்போவதாக இஸ்ரவேல் நேற்று அறிவித்தது.

பிரதமர் யிற்ஷாக் ஷமீர் இதனை நேற்றுச் செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் முன்னதாக இஸ்ரவேல் பிரதமருடன் பேச்சுக்கள் நடத்தினார்.

உத்தேச மத்திய கிழக்கு சமாதான மாநாட்டை கூட்டாக அமெரிக்காவும், சோவியத் யூனியனும் நடத்த முன்வந்துள்ளன என்பது தெரிந்ததே. [இ-எ]

# யாழ். பல்கலைக்கழகம்
# மகாபொல கொடுப்பனவு

## 8 ஆவது தவணைப்பணம்

### முதலாம் வருடம்

| | | |
|---|---|---|
| மருத்துவ பீடம் | 05-08-91 | 9-00—12-00 |
| கலைப்பிரிவு | 07-08-91 | 1-30— 3-00 |
| வர்த்தகப்பிரிவு | 12-08-91 | 9-00—12-00 |
| வியாபார நிர்வாகப்பிரிவு | | |

## 9 ஆவது தவணைப்பணம்

### இரண்டாம் வருடம்

| | | |
|---|---|---|
| மருத்துவ பீடம் | 05-08-91 | 1-30— 3-00 |
| கலைப்பிரிவு | 08-08-91 | 9-00—12-00 |
| வர்த்தகப்பிரிவு | 12-08-91 | 1-30— 3-00 |
| வியாபார நிர்வாகப்பிரிவு | | |

### மூன்றாம் வருடம்

| | | |
|---|---|---|
| மருத்துவ பீடம் | 06-08-91 | 9-00—12-00 |
| கலைப்பிரிவு | 08-08-91 | 1-30— 3-00 |
| வர்த்தகப்பிரிவு | 13-08-91 | 9-00—12 00 |
| வியர்பார நிர்வாகப்பிரிவு | | |

### நான்காம் வருடம்

| | | |
|---|---|---|
| மருத்துவ பீடம் | | |
| 4ஆம், 5ஆம் வருடங்கள் | 06-08-91 | 1-30— 3-00 |
| கலைப்பிரிவு | 09-08-91 | 9-00—12-00 |
| வர்த்தகப்பிரிவு | 13-08-91 | 1-30— 3-00 |
| வியாபார நிர்வாகப்பிரிவு | | |

### 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் வருட

| | | |
|---|---|---|
| பௌதிக விஞ்ஞானப்பிரிவு | 07-08-91 | 9-00—12-00 |
| உயிரியல் விஞ்ஞானப்பிரிவு | 09-08-91 | 1-30— 3-00 |
| | 14-08-91 | 9-00—12-00 |

## 7ஆவது தவணைப்பணம்

விவசாய பீட மாணவர்கள் இவர்களுக்கான கொடுப்பனவு விவசாய பீடத்தில் வைத்து வழங்கப்படும்.

**கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை**

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2 ரூபா 2/- பெறுமதியான முத்திரை

பதிவாளர்.

[சி-0324]

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 27 — 05 — 1933 | 04 — 08 — 1989 |

## அமரர் தம்பிராஜா நடராஜா

[பிரதம லிகிதர் தலவர்க்கலை, லோகி எஸ்டேட்]

**திதி: 12 - 08 - 1991**

குடும்பத்தின் குல விளக்காய் - எம்
குலம் காத்த சுடர் விளக்கே!
கல்விதனை எமக்கீந்து கற்றோரும் மற்றோரும்
போற்ற வைத்த உத்தமனே
அப்பா என நாமத்தை நாம் அழைக்க
தரணியிலே காணோமே!
ஆண்டு இரண்டு சென்றாலும்
அணையாது உங்கள் நினைவு.

தங்கள் ஆத்ம சாந்தி வேண்டி ஆண்டவனை பிரார்த்திக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்.

''பவானி இல்லம்''
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (17723)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 05 — 09 — 1911 | 05 — 07 — 1991 |

வேலணை கிழக்கு

## திருமதி ஆறுமுகம் ஆச்சிமுத்து

''எங்களெல்லோரையும் வாழ வைத்த அன்னையின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்''

04 - 08 - 91 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை, மற்றும் வீட்டுக் கிருத்தியத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

843, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (17726)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
19 - 06 - 1916

மறைவு:
04 - 08 - 1989



## திருமதி ருக்மணி செல்லத்துரை

எங்கள் அன்புத் தெய்வம் அம்மாவே! உங்கள் புன்னகை தவழும் இனிய முகம் எம் கண்களில் தெரிகிறதே. எம்மை அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழ வைத்த தெய்வமே! எங்கள் இதயத்தில் என்றும் உங்கள் நினைவுகள் நீங்காது நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரன்.

17, பிளைச்சர் வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (17649)

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
23 - 11 - 1960

மறைவு:
14 - 8 - 1990

திதி:
4 - 8 - 1991

அமரர்

## சிவசுப்பிரமணியம் இராஜகுமார்

(கிளி)

ஓர் ஆண்டு உருண்டு ஓடிவிட்டது கணவா! என்றும் உங்கள் நினைவாகவே இருந்து உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி,
மகள், தாய், சகோதரர்கள்,
மாமா, மாமி, மச்சான்மார்,

பழனி ஆண்டவர் லேன்,
கோண்டாவில் கிழக்கு. (17466)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அடாத்தானது

போர்க்களம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தாக்குதல் நடத்துவதை விமானப் படையினர் மீண்டும் தீவிரப்படுத்தி வருகின்றனர்.

வட மாகாணத்தில் இப்போது பெரும் யுத்தமுனையாக விளங்குவது ஆனையிறவாகும். அரசாங்கத்தின் முப்படைகளும் சேர்ந்து கடந்த இருபத்தைந்து நாட்களாக ஆனையிறவுப் பகுதியில் விடுதலைப் புலிகளுடன் போர் புரிந்து வருகிறார்கள்,

ஆனையிறவு இராணுவ முகாமில் சிக்குண்டிருக்கும் சிப்பாய்களை மீட்பதற்காகச் சுமார் 8,000 படையினர் வெற்றிலைக்கேணியில் தரை இறக்கப்பட்டு யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. அரசாங்கம் தனது சகல வளங்களையும்,வல்லமைகளையும் உச்சப் பயன்பாட்டுக்கு உள்ளாக்கி முழு அளவில் போராடுகிறது.

இதனிடையில் தென்னிலங்கை மக்களை திருப்திப் படுத்துவதற்காக — ஏமாற்றுவதற்காக, அரச படைகள் திறமையுடன் போராடுவதாக அவர்களுக்குக் காட்டிக்கொள்வதற்காகப் பாதுகாப்பு அமைச்சு கொழும்புப் பத்திரிகைகள் மூலம் புளுகுகளை கட்டவிழ்த்து விடுகிறது.

பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் வழங்கும் ''கயிறுகளை'' வைத்துக் கொண்டு, அங்கிருந்து வெளிவரும் பத்திரிகைகள் ஆனையிறவு முகாமிலிருந்து கூப்பிடு தூரத்தில் மீட்புப் படையினர் நெருங்கிவிட்டதாகச் செய்தி திரித்து இரண்டு வாரங்கள் கழிந்து விட்டன!

வெற்றிலைக்கேணியில் தரை இறங்கிய இராணுவம் வெற்றியின் விளிம்பில் என்று அவை செய்தி வெளியிட்ட போதிலும் மீட்புப் படையினர் ஆனையிறவில் இருந்து இன்னும் இரண்டரை கிலோ மீட்டர் தொலைவில் இருப்பதாக யுத்தகளத்தில் இருந்து சென்ற இராணுவ உயர்அதிகாரி ஒருவர் 2 நாட்களுக்கு முன் ஒப்புக்கொண்டார்.

அதன் பின்னர் மேலும் 2,000 துருப்புகளைத் கரையிறக்கியும் நிலைமையில் மாற்றமில்லை. அங்குலம் அங்குலமாகவே அவர்களால் நகரமுடிகிறது. அந்த அளவுக்கு விடுதலைப் புலிகளின் தாக்குதல் மிகக் கடுமையாக இருப்பதாக உயர் அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள்.

ஆளணி, அம்பு, எடுபிடி. சட்டம் மற்றும் இத்தியாதி வசதிகள் இருந்தும் ஆனையிறவு முகாமை இன்னும் மீட்க முடியவில்லையே என்று அவர்களுக்கு மனம் வேகுவது இயல்பே.

அதனால் யுத்த களத்துக்குப் பல மைல் தொலைவில் உள்ள பகுதிகளில் கண்டபடி வானத் தாக்குதல்களை நடத்தத் தொடங்கியிருக்கிறார்கள்.

நேருக்கு நேர் யுத்தம் புரியத் தயாராக வந்தவர்கள், களநிலைமை தமக்குப் பாதகமாக இருப்பது கண்டு மக்கள் வாழும் பகுதிகளில் விமானத் தாக்குதல்கள் நடத்துவது யுத்த வரன்முறைக்கு ஒவ்வாத ஒன்று.

தமது ஆற்றாமையின் விரக்திக்குப் பொதுமக்கள் மீது வஞ்சம் தீர்க்கும் அரசபடைகளின் செயல் அடாத்தானதும் ஆகும்.

யுத்த களத்தை விட்டு வந்து நிராயுதபாணிகளான மக்களைக் கொல்லும் போர் முறையை உலகில் வேறு எங்கும் கண்டதில்லை. கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் தமிழர்களை இனப் படுகொலை செய்வதென்ற அரசின் ''கோட்பாடு'' இங்கேயும் பிரதிபலிக்கிறது.

### விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 4

யாழ். கல்வித்திணைக்கள முறைசாரார்க் கல்விப் பிரிவின் கீழ் வடமராட்சியில் இயங்கும் முதலுதவி நிலையங்களில் கடமையாற்றும் அனைத்து அங்கத்தவர்களுக்குமான விசேட கூட்டம் இன்று ஞாயிறு காலை 9-00 மணிக்கு நெல்லியடி ம. ம. வித்தியாலய மகளிர் பிரிவில் நடைபெறும். [த]

### 2,000 மாணவர்கள் கூடுதலாக அனுமதி

கொழும்பு, ஆக். 4

கடந்த வருடத்தை விட இந்த வருடம் 2 ஆயிரம் மாணவர்கள் கூடுதலாக பல்கலைக் கழகங்களில் அனுமதிக்கப்பட உள்ளனர்.

நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களில் கடந்த வருடம் 9,200 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்த வருடம் இது 11,200 ஆக அதிகரிக்கப்பட உள்ளதாக கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார். (இ)

# ஈழ அகதிகளை பலவந்தமாக அனுப்புவது நியாயமற்றது

## தொண்டமான் பேட்டி

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 4

இன்றைய சூழ்நிலையில், தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளைப் பலவந்தமாக வெளியேற்றுவது முற்றிலும் நியாயமற்றதாகும்.

ஆனால் தமிழர்கள் எல்லாக் காலமும் வெளிநாடுகளுக்குச் சென்று அகதிகளாக வாழவேண்டும் என்று எண்ணக் கூடாது. அவர்கள் தமது சொந்த நாட்டிலேயே வாழ்ந்து தங்கள் உரிமைகளுக்காக உழைக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் திரு. எஸ். தொண்டமான், லண்டனில் இருந்து வெளிவரும் ''தமிழ் ரைம்ஸ்'' சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

ஈழத் தமிழர்கள் இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்லக் கூடாது என்ற நிலைப்பாட்டையே நான் ஆரம்பத்திலிருந்து கடைப்பிடித்து வருகிறேன் —

சில அரசியல்வாதிகள் தங்கள் சொந்த நலன் கருதியே தமிழர்களை இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்லுமாறு தூண்டி வருகிறார்கள் —என்றும் திரு. தொண்டமான் தெரிவித்திருக்கிறார்.

''தமிழ் ரைம்ஸ்'' ஆசிரியருக்கு அளித்த விசேட பேட்டியில் அமைச்சர் தொண்டமான் தெரிவித்த முக்கிய கருத்துகள் சில வருமாறு:-

★ அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவதற்கு மத்தியஸ்தராகப் பணி புரிவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தால் அதனைச் செய்வதற்கு நான் எப்போதும் தயாராகவே உள்ளேன்.

இரண்டு தரப்பினரும் என் மீது நம்பிக்கை வைத்திருக்கும் பட்சத்தில் நான் அதனைச் செய்வதற்குத் தயார்.

அரசாங்கத்தையும், ஜனாதிபதியையும் பொறுத்த வரையில் அவர்கள் என்மீது பூரண நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

விடுதலைப் புலிகளுக்கும், தமிழர் சார்பில் பேசும் ஏனையோருக்கும் எனது சேவையில் நம்பிக்கையுண்டா என்பதைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு அவர்களையே சார்ந்ததாகும்.

★ இனப் பிரச்சினை குறித்து அரசாங்கம் ஏன் தனது சொந்தத் தீர்வுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கவில்லை என்று நீங்கள் கேட்கிறீர்கள்.

தீர்வுக்கான திட்டங்களை மீண்டும்மீண்டும் புதிது புதிதாகமுன்வைப்பதில் பயனில்லை. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா காலத்திலிருந்தே தீர்வுகள் முன்வைக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளன. ஆனால் பிரச்சினை தீர்க்கப்படவில்லை.

ஜனாதிபதி தமது மனதில் உள்ளதை வெளிப்படையாக தெரிவித்துவிட்டார். ஆகையால் இனி தமிழர் சார்பில் பேசுபவர்கள் தங்களுக்கு உண்மையாக என்ன வேண்டும் என்பதைத் திட்டவட்டமாகக் கூற வேண்டும். தமக்குள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். (அ)

# காவிரிப் பிரச்சினையால் காங்கிரஸ் பிளவுபடலாம்

## வாழப்பாடி எச்சரிக்கை

சென்னை, ஆக. 4

காவிரி நீர்ப் பிரச்சினையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டால் தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்படக் கூடும்.

மாநில இந்திரா காங்கிரஸ் தமிழ் நாடு மாநிலத் தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

தமது கட்சியிலுள்ள அதிருப்தியாளர்களை அவர் வன்மையாகக் குறை கூறினார்.

நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இந்த கண்டனங்களை விடுத்தார். தாம் பதவி விலகியது சரியான நடவடிக்கை தான் என்றும் மாநிலத்தில் காங்கிரஸின் தோற்றத்தை இது உயர்த்தியிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

காங்கிரஸ்— அ. தி. மு. க. கூட்டணியை குறை கூறும் கட்சி எம். பிக்களும் எம். எல். ஏக்களும் தேர்தல்களில் போட்டியிட்டிருக்கக் கூடாது. இப்போதும் கூட அவர்கள் தமது பதவிகளை ராஜினாமாச் செய்யலாம் என்றும் அவர் கூறினார். (இ-த)

# கடற்படைத் தளங்கள் தமிழகத்தில் விஸ்தரிப்பு

சென்னை, ஆக. 4

இராமேஸ்வரத்திலும் நாகபட்டினத்திலும் இப்போதுள்ள சிறிய கடற்படைத் தளங்கள் விரிவுபடுத்தப்பட இருக்கின்றன என மத்திய பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் நேற்று தெரிவித்தார்.

கரையோரப் பகுதிகளில் ஈழப் போராளிகளின் நடமாட்டத்தினால் ஏற்படும் தொல்லைகளைச் சமாளிக்க கடலோரக் காவல் படையினருக்கு நவீன ஆயுதங்களும் கூடுதலான படகுகளும் ஹெலிக்கொப்டர்களும் வழங்கப்படும் என்றும் அமைச்சர் பவார் கூறினார்.

கச்சதீவுக்கு செல்லும் இந்திய மீனவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரின் தொல்லைக்கு ஆளாவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் கூறிய அமைச்சர், ஸ்ரீலங்கா அரசுடன் இந்திய அரசு பேச்சுகள் நடத்திய பின்னர் கச்சதீவுக்கு அருகில் சென்று மீன் பிடிக்க இந்திய மீனவர்கள் அனுமதிக்கப்படுவர் என்றார்.

தமிழகக் கடலோரப் பகுதிகளில் மேலதிக கடற்படைத் தளங்களை எங்கெங்கு அமைப்பது என்பது குறித்து தமிழக அரசுடன் பேசி மத்திய அரசு முடிவுசெய்யும் என்றும் அவர் கூறினார்.

முன்பதாக அமைச்சர் பாம்பன் பாலம், மண்டபம் அகதிக்ள் முகாம் ஆகியவற்றையும் சென்று பார்வையிட்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# புலிகளைச் சமாளிக்க மத்திய அரசு உதவுமாம்

## தமிழக அரசுக்கு உறுதி மொழி

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் பிரச்சினையைச் சமாளிக்க மத்திய அரசு அனைத்து ஒத்துழைப்பையும் வழங்கும்.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. சரத் பவார் மேற்கண்ட உறுதி அளித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்து ஒரு மணி நேரம் அவர் பேச்சு நடத்தினார். அப்போதே இந்த உறுதி மொழி வழங்கப்பட்டது.

பேச்சுக்களின் போது பல உயர் அதிகாரிகளுடன் கடற்படைத் தளபதி அட்மிரல் ராம்தாஸும் உடன் இருந்தார். இதன் பின் செய்தியாளர்களிடம் பேசிய சரத் பவார் முதலமைச்சரும், மத்திய அரசும் புலிகளை முறியடிக்க மிகத் தீவிரமாக இருக்கின்றன என்றார்.

இதற்கு மத்திய அரசு அனைத்து உதவிகளையும் வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடலோரப் பாதுகாப்புப் படையை வலுப்படுத்த வேண்டும் என்று ஜெயலலிதா குறிப்பிட்டதாக கூறிய அவர் மேலும் ஒரு சில கடலோர பாதுகாப்புக் கப்பல்களை அனுப்புவது பற்றி பரிசீலிக்கப்படும் என்றார்.

கடலோரப் பாதுகாப்புப் படைக்கும், தமிழக காவல் துறைக்கும் இடையே ஒத்துழைப்பும் ஒருங்கிணைப்பும் நிலவுவதாகவும் அவர் கூறினார். (இ-த)

# மன்னார்த் தீவினுள் செல்ல சிபார்சுக் கடிதம் தேவை

யாழ்ப்பாணம், ஆக. 4

மன்னார் தீவினுள் உட்பிரவேசிப்பதாயின், பயணிகள் சிபார்சுக் கடிதம் பெற்றுச் செல்ல வேண்டும் என தமிழீழ போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு அறிவித்துள்ளது.

அரச ஊழியர்கள் மற்றும் அனைத்து பயணிகளுக்கும் இது பொருந்தும்.

தத்தமது பகுதி கிராம சேவையாளர் அல்லது விடுதலைப்புலிகளின் பிரதேச அரசியல் பொறுப்பாளர்களிடம் சிபார்சுக் கடிதத்தை பெறலாம் என்றும்—

விடத்தல்தீவு செயலகத்துக்கு இந்த சிபார்சுக் கடிதத்துடன் வந்தால் மட்டுமே, பயணத்தை தொடரமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## சமூகம் தர கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 4

யாழ். இந்துக் கல்லூரி 11 ஆம் ஆண்டு, புதிய 12 ஆம் ஆண்டு, 12 ஆம் ஆண்டு ஆகிய வகுப்பு மாணவர்களில் போராளிகள் பராமரிப்பிற்கு என தமது பெயர்களைப் பதிந்தவர்களையும் புதிதாகப் பெயர் பதிய விரும்புவோர்களையும் இன்று காலை 10 மணிக்கு கல்லூரிக்கு சமூகம் தருமாறு கேட்கப்பட்டிருக்கிறது. (உ)

## அவ்ரோ வட்டமிட்டது

யாழ்ப்பாணம், ஆக. 4

நேற்று மாலை 6 மணியளவில் பலாலிப் பக்கமிருந்து வந்த அவ்ரோ விமானம் ஒன்று யாழ். நகரையும் அதனை அண்டிய பகுதிகளுக்கும் மேலாக சில தடவைகள் வட்டமிட்டது.

இதனால் இப்பகுதிகளில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது. (ஒ-515)

## இன்று விசேட பூசை

யாழ்ப்பாணம், ஆக. 4

ஆனையிறவுப் பகுதி போர்க்களத்தில் நிற்கும் வேங்கைகளுக்கு இறை ஆசி வேண்டி குடாநாட்டிலுள்ள ஆலயங்கள் பலவற்றிலும் விசேட பூசை, ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன.

இன்று ஞாயிறு ஆனைக்கோட்டை ஸ்ரீ வரதவிக்ன விநாயகர், கோப்பாய் ஸ்ரீ சக்கராழ்வார், நாகர் கோவில் நாகதம்பிரான், சுழிபுரம் வழக்கம்பரை அம்பாள். கொக்குவில் மேற்கு-சொர்ணவடலி சித்திவிநாயகர் ஆகிய கோவில்களில் விசேட பூசை அபிஷேகம், கூட்டுப் பிரார்த்தனை போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன,

[உ-த-72-100-28-5]

## பொம்மர் ரொக்கட் தாக்கு

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மக்கள் நடமாடும் வேளையில் — அவர்களை நோக்கி திடீர் திடீரென பொம்மர்கள் ரொக்கட் தாக்குதல்களை நடத்திவருகின்றன.

கடந்த புதனன்று மணற்காடு பகுதியில் பருத்தித்துறை – மருதங்கேணி வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தோர் மீதும்—

வியாழக்கிழமை குடாரப்பு பகுதியில் விளையாடிக்கொண்டிருந்த பிள்ளைகளை நோக்கியும்—ரொக்கட் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

தெய்வாதீனமாக இவ்விரு சம்பவங்களிலும் எவ்வித விபரீதமும் ஏற்படவில்லை.

[ஒ-144]

## கிட்டு மீறினாராம்!

தனது கால் முறிவுக்காக சிகிச்சை பெறுவதற்கென லண்டன் சென்ற கிட்டு தனது வீஸா வரைமுறைக்குப் புறம்பாக விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரிப்பதில் ஈடுபட்டதாலேயே நாட்டை விட்டு வெளியேறும்படி கேட்கப்பட்டுள்ளார்.

இப்படி லண்டனில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-த)

## வைரவிழா

வட இலங்கை சங்கீத சபையின் வைரவிழா நிகழ்ச்சிகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 6 ஆம் திகதி காலை 9-00 மணி முதல் 11-00 வரையும், 7 ஆம், 8 ஆம் திகதிகளில் 3-00 மணி முதல் 7-00 மணி வரையும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். [த]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினசரி பீரங்கி தாக்குதல்

தாளையடி, ஆக. 4

வடமராட்சி கிழக்கில் கரையோரப் பகுதி கிராமங்கள் மீது தினசரி கடலில் இருந்து படையினர் பீரங்கித் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

வெற்றிலைக்கேணியில் இருந்து பீரங்கிப் படகுகளில் செல்லும் படையினரே குடியிருப்புப் பகுதிகளை நோக்கி தாக்குதல்களை நடத்துகின்றனர்.

கடற்படையினர் எவ்வேளையிலும் கடலில்ரோந்து புரிவதால், செம்பியன்பற்று தொடக்கம் மணற்காடு வரையான கடற்றொழிலாளர்கள் பெரிதும் பாதிபபடைந்துள்ளனர். (ஒ-144)

# 3 தமிழ் மாவட்டங்களில் பரீட்சை ஆரம்பமாகவில்லை!

யாழ்ப்பாணம், ஆக. 4

இவ்வாண்டுக்ககன ஜி.சீ ஈ. உயர்தரப் பரீட்சை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் நேற்று ஆரம்பமாகியது.

பரீட்சை சம்பந்தமான அனுமதி அட்டை, வினாத்தாள்கள் மற்றும் முக்கிய சுஸ்தாவேஜுக்கள் வந்து சேராததால் பரீட்சை வடக்கில் நடைபெறவில்லை என்பது தெரிந்ததே


வினாத்தாள்கள் இனி வந்து சேர்ந்தால் அந்தத் தினத்துக்கு மறுநாளில் இருந்து பரீட்சையை நடத்த யாழ் கல்விப்பணிமனை தயாராக உள்ளது. [உ-5]

## மீட்கப்பட்ட..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| ★ அவற்றுக்குரிய ரவைக் கூடுகள் | — | 42 |
| ★ ரி 81 ரக துப்பாக்கிகள் | — | 07 |
| ★ அவற்றுக்குரிய ரவைக் கூடுகள் | — | 28 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 1,277 |
| ★ 203 ரக் ஷெல்கள் | — | 16 |
| ★ ஜே. ஆர். ரக கிரனேட்டுகள் | — | 03 |
| ★ 60 மி. மீ. ஷெல்கள் | — | 10 |
| ★ 60 மி. மீ. மோட்டார் புறொப்ளர் | — | 01 |
| ★ பிறவுணிங் கைத் துப்பாக்கி | — | 01 |
| ★ அதற்குரிய ரவைக் கூடுகள் | — | 02 |
| ★ தொலைத் தொடர்பு சாதனம் | — | 01 |

## ஈராண்டு நினைவலைகள்



அமரர்

### ஸ்ரீ குமாரசாமி துரைராஜா

[ஓய்வுபெற்ற ஆங்கில தட்டெழுத்தாளரும், விகிதரும்]

மலர்வு: 3-10-1933

உதிர்வு: 26-7-1989

திதி: 4-8-1991

ஈசனின் அருள் தரும் இனிய முகமும்
ஆதவன் ஒளி வீசும் நனிய அகமும்!
சாற்றிடுதே உன் புகழை நிதமும்; அது
தேற்றிடுதே நம் நினைவுகளை அனுதினமும்!!

உங்கள் பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள்.

44, றெயில் றோட்,
கொக்குவில் கிழக்கு.

[17720]

## நியமனம்

இந்திய விமானப்படையின் புதிய தளபதியாக எயர்மார்ஷல் என். சி. சூரி நேற்றுப் பதவி ஏற்றார்.

## முகாமுக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

னர்.

எனினும் விடுதலைப் புலிகள் சளைக்காது கடும் எதிர்த் தாக்குதல் நடத்தினர். நேற்று மாலை 6 மணி வரை தொடர்ந்து இரு சாராருக்கும் இடையில் உக்கிரப்போர் நடந்ததாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் ஆனையிறவு இராணுவ முகாமுக்குள் நேற்று மாலை மீட்புப் படையினர் நுழைந்தனர் என்று பாதுகாப்பு துணை அமைச்சின் செயலாளர் எயர் மார்ஷல் வால்டர் பெர்னாண்டோ கொழும்பில் தெரிவித்தார்.

முகாமில் காயமடைந்திருந்தவர்கள் வெளியேற்றப் பட்டதாகவும் அவர் சொன்னார்.

ஆனால் இத்தகவலை வெளிநாட்டுச் செய்தி ஏஜென்சிகள் ஊர்ஜிதப்படுத்தி வெளியிடவில்லை.

எயர் மார்ஷல் வால்டர் பெர்ணாண்டோ இத்தகவலை கூறியதாகத் தெரிவித்த அதேவேளை சுயேச்சை வட்டாரங்கள் மூலம் தம்மால் உறுதிப்படுத்த முடியவில்லை என்றும் அவைகுறிப்பிட்டன.

## மட்டக்களப்பு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

அங்கு நடந்த சண்டையில விடுதலைப் புலிகள் தரப்பில் இரண்டாவது லெப்டினன்ட் ஜெயந்தன் [விநாயகமூர்த்தி விஜயகுமார் — அம்பாறை] வீரமரணமடைந்தார.

**இரண்டாவது சம்பவம்**

இதேசமயம் வெலிக்கந்தை படை முகாமில் இருந்து மூன்று வாகனகங்ளில் படையினர் உன்னிச்சைப்பகுதியை நோக்கி முன்னேறி வந்தனர்.

அவர்கள் மீது வடமுனைப் பாலம் என்னும் இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் படையினர் 6 பேர் கொல்லப்பட்டனர். அதை அடுத்து ஏனைய சிப்பாய்கள் அங்கிருந்து பின்வாங்கிச் சென்றனர்.

படையினர் கைவிட்டுச் சென்ற மூன்று வாகனங்களும் விடுதலைப் புலிகளினால் தீவைத்து எரிக்கப்பட்டன. (ஒ-5)

## பிள்ளைகளை...

[1 ஆம் பக்க்த் தொடர்ச்சி]

யைச் சேர்ந்த இராமச்சந்திரன் தியாகராசா [வயது 18), திருநகரைச் சேர்ந்த யோகராசா பிரபா [வயது 16-பெண்] ஆகிய இருவருமே தத்தமது பெற்றோர்களினால் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். [ஒ-5]

## கடற்படை..

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

டார்.

பின்னர், ஈழப் போராளிகள் ஊடுருவல் நடத்துவதாகக் கூறப்படும் தமிழக கடலோரப் பகுதிகளை ஹெலிக்கொப்டர் மூலம் சுற்றிப்பார்வையிட்டார். (உ-எ)

ஊர்காவற்றுறை உ. அ. அ. பிரிவு:

# உலர் உணவு அட்டைகள் நாளை முதல் மீளாய்வு

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களின்— அகதி முகாமில் தங்கியுள்ளோர் தவிர்ந்த - ஏனைய அனைவரது உலர் உணவு அட்டைகளும் நாளை முதல் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை மீளாய்வு செய்யப்படவுள்ளன.

எனவே மேற்படி குடும்பங்களின் பிரதான குடியிருப்பாளர்கள் அனைவரும் தத்தமது அடையாள அட்டை மற்றும் உலர் உணவு அட்டையுடன் யாழ் புனித மரியாள் பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மீளாய்வு செய்யப்படாத உலர் உணவு அட்டைக்கு அடுத்த கட்ட உலர் உணவு நிவாரணம் வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-5]

# கைதான 3 ஈழத் தமிழரின் பொலீஸ் காவல் நீடிப்பு

சென்னை, ஆக. 4

ராஜீவ் கொலை தொடர்பாக புதுடில்லியில் கைது செய்யப்பட்டு, தனிப் புலனாய்வுக் குழுவினால் சென்னை கொண்டு வரப்பட்டுப் பின்னர் பொலீஸ் காவலில் வைக்கப்பட்டுள்ள ஆதிரை, கண்ணன், சபாபதி ஆகியவர்களின் பொலீஸ் காவல் காலம் இம்மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப் படும்.

இந்த வழக்கை விசாரிக்கும் நீதிபதி இது தொடர்பாக உத்தரவிட்டுள்ளார். [இ-தூ].

## நன்றி நவிலல்

### திரு. வி. எம். கணபதிப்பிள்ளை

எங்கள் குடும்பத் தலைவர் திரு. வி. எம். கணபதிப் பிள்ளை அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு, பிரச்சினைகளுக்கும் துயரங்களுக்கும் மத்தியிலும் தவறாது சமுகமளித்து, எங்கள் துயரத்தில் பங்கு கொண்டு, சகல விதத்திலும் உதவிகளை வழங்கி, அன்னாரது இறுதிக் கிரியைகளிலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும், குறிப்பாகச் சரசாலை வாழ் மக்களுக்கும், போக்குவரத்துச் சிரமத்தின் மத்தியிலும் தூர இடங்களிலிருந்து வருகை தந்தவர்களுக்கும், இந்த இக்கட்டான காலகட்டத்தில் எமக்கு உரிய நேரத்தில் உதவிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கும், தமது கடைகளைப் பூட்டி அஞ்சலி செலுத்திய சாவகச்சேரி வர்த்தகர்களுக்கும், உரிய காலத்தில் மரணச் செய்தியைப் பிரசுரித்த தமிழீழத்தில் இயங்கும் சகல பத்திரிகை நிறுவனத்தினருக்கும், வானொலிக்கு மரணச் செய்தியை அறிவித்த கொழும்பு நண்பர்களுக்கும், அந்திய கால சேவை நிலையமான வைற் ஹவுஸினருக்கும் எங்கள் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— V. M. K. குடும்பத்தினர்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

[17736]

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் இராமலிங்கம்

திருமதி பாக்கியம் இராமலிங்கம் 24-07-91 இல் இந்தியாவில் இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற K. E. இராமலிங்கம் [முன்னாள் அதிபர் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி] அவர்களின் அன்பு மனைவியும், மகேந்திரலிங்கம் [இந்தியா], சண்முகலிங்கம் [U. S. A.], சுந்தரலிங்கம் [மக்கள் வங்கி], கணேசலிங்கம், தேனுமணி, பஞ்சலிங்கம் [U. S A.] ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஸ்வரி, சுசீலா, சிவகாமி, வெங்கடேஸ்வரி, பாலரண்டராஜா [ஆசிரியர்], புஸ்பராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், பிறேம்ராஜ், சிறீஸ்கந்தராஜ், நளாயினி, சதீஸ்ராஜ், தயாளன், சுதாமதி, சிவமதி, வாசுகி, வசுமதி, வானதி, சரவணன், தக்ஷினி, லோஜன், கோபிதன், மோகனகுமார், சுகுமார் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மணிமாளிகை,
சங்கானை.

தகவல்:
பிள்ளைகள்

[17469]

COMPLAN காம்ப்ளான் R

குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியோர் அனைவருக்குமானது. இழந்த ஊட்டத்தைப் பூர்த்தி செய்ய
22 அத்தியாவசியமான ஊட்டச் சத்துக்கள் அடங்கியது.
COMPLAN திட்டமிட்ட பரிபூரண உணவு.
3 நாவிற்கினிய சுவைகளிலே கிடைக்கிறது.

[சி-0263]

GLAXO [CEYLON] LTD.,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 04-08-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.